www.tamilarangam.net

# வன்முறைக்கு எதிராக...

அன்புடன் நண்பர்களுக்கு,

வணக்கம். கடந்த 14.06.2002 பாரிஸில் துப்பாக்கிமுனையில் என்மீது நடந்த வன்முறை தொடர்பாக உண்மைக்குப் புறம்பான செய்திகளும் வதந்திகளும் ஒரு சில நபர்களினாலும், சில சக்திகளினாலும் திட்டமிட்டு பரப்பப்பட்டுக் கொண்டிருப்பதனால், இவ்வேளையில் இதுபற்றிய தெளிவை, உண்மை நிலையைக் கொடுக்கவேண்டியவனாகி நிற்கின்றேன்.

நான் கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியத்திற்கு எதிரானவன் என்றும் மட்டக்களப்பு அபிவிருத்திக்குத் துரோகி என்றும் பல்வேறு முனைகளில் இந்த வதந்திகள் பரப்பப்படுகின்றன.

வெகுஜன இயக்கங்களின் உருவாக்கம், அவற்றின் சுதந்திரமான செயற்பாடு, இவைகளில் மிகுந்த அக்கறையும் ஆதரவும் கொண்டவன் நான். இலங்கையில் கிராமிய மேம்பாட்டிலும், சமூக பொருளாதார கல்வி வளர்ச்சியிலும் மாபெரும் அக்கறை கொண்டு செயற்பட்ட 'காந்தியம்' எனும் சமூக செயற்பாட்டு அமைப்பை உருவாக்கி செயற்பட்டவர்களில் நானும் ஒருவன். சுதந்திரமான சமூக அபிவிருத்தி அமைப்புகளின் உருவாக்கங்களுக்கு பின்நின்று உழைத்துக் கொண்டிருப்பவன், ஒடுக்கப்பட்டமக்களின் வாழ்வியல் வளர்ச்சிக்காக விடிவுக்காக எம் வாழ்வை இழந்தவர்கள் நாங்கள். இன்றும் பாரிஸில் நானும் எனது நண்பர்களும் பல்வேறு அக்கறை கொண்ட செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

சுதந்திரமான, மக்களின் வளர்ச்சிமீது அக்கறை கொண்ட, ஒரு ஒன்றியம் பாரிஸில் இயங்குகின்றதென்றால் முதலில் ஆதரவும் மகிழ்ச்சியும் கொள்பவர்கள் நாங்களாகவே இருக்கமுடியும். அதேநேரம் குறுகிய மனநிலை கொண்டவர்களின், போலி மனிதர்களின், சமூக விரோதிகளின் கூடாரமாக, இவ்வாறான நபர்களின் அடையாள இருத்தலுக்கு இவ்வமைப்புகள் பயன்படுமாயின் அவ்வமைப்புகளுக்கு எதிரான கடும் விமர்சனங்களை முன்வைப்பவர்களாகவும் நாங்கள்தான் முதலில் இருப்போம். எனவே இவ்வாறான குறுமன மனிதர்களின் சுயநலங்களுக்கு இவ்வமைப்புகள் பலிக்கடாவாக்கப்படக்கூடாது என்பதில் நாம் அக்கறை கொண்டவர்களாக இருக்கவேண்டும். இந்த அடிப்படையில்தான் கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியத்தின் செயற்பாடுகளையும் நான் பார்க்கின்றேன். இவ்வொன்றியம், இவ்வாறான சுயநலமும், பிரதேச வெறியும், இப் பிரதேச வெறியில் குளிர் காய்ந்து தன் அரசியல் பிழைப்பை நடாத்தும் நபர்களினால் வழிநடத்தப்படுகின்றதோ என்ற சந்தேகத்தை இப்போது நான் என்னுள் எழுப்பிக் கொள்கிறேன். ஆரோக்கியமான செயற்பாடுகளுக்கும், மக்களின் வளர்ச்சிக்காகவும் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியம் இவ்வாறான நபர்களினால் வழிநடத்தப்படுமாயின் அதன் நற்சிந்தனைகளும் அதன் எதிர்கால நம்பிக்கைகளும் சிதைந்துவிடும் அபாயம் உள்ளதை ஒன்றிய நண்பர்கள் உணர்தல் அவசியம்.

14.06.2002 பாரிஸ் லாச்சப்பலில் என்மீது துப்பாக்கிமுனையில் வன்முறை செலுத்திய அந்த நான்கு இளைஞர்களில் ஒருவர் 23.06.2002 அன்று கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியத்தின் தலைவரோடு பலர் முன்னிலையில் என்மீது தாக்குதல் நடாத்தியமைக்காக மன்னிப்புக் கோரினார். இம்மன்னிப்புக் கோரல் என்பது அவ் இளைஞரின் நல்மனநிலையையே காட்டுகின்றது. இவ்வன்முறைத்தாக்குதலில் சம்பந்தப்பட்ட துப்பாக்கி நபரும் ஏனைய இருவரும் மன்னிப்புக்கோரி வரவில்லை. இத்துப்பாக்கி நபர் பற்றிக் கதைக்கப்பட்டபோது ஒன்றியத்திற்கும் அவருக்கும் தொடர்பு இல்லை என்றும் மன்னிப்புக் கோரிய இளைஞர் ஒன்றியத்தின் அங்கத்தவர் என்றும் கூறப்பட்டது. இவ்வன்முறை தொடர்பான சட்ட நடவடிக்கைகளில் ஒன்றியத்தின் பெயரைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் சட்ட நடவடிக்கைகளை மீளப் பெறமுடியுமா என்றும் கேட்கப்பட்டது. இதற்கு நான் துப்பாக்கி நபர் தொடர்பாகவும் அவர் பின்னணி தொடர்பாகவும் சந்தேகம் கொண்டுள்ளதாகவும் இந் நபர்களின் எதிர்கால நடவடிக்கையைப் பொறுத்தே என் சட்ட அணுகுமுறை அமையும் என்றும் கூறினேன். அதேநேரம் ஒன்றியத்தின் பெயருக்கும் வளர்ச்சிக்கும் எவ்வித பங்கமும் ஏற்படாதவாறு என்னால் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றும் கூறினேன்.

இவ்வன்முறைச் சம்பவத்தில் என்னைத் தாக்கியதற்காக மன்னிப்புக்கோரிய இவ்விளைஞர் நல்லிதயம் கொண்டவராக இருப்பதை அவதானிக்க முடிந்தது. அவரிடம் மட்டக்களப்பு பிரதேச முன்னேற்றம், வளர்ச்சி தொடர்பான அக்கறை இருக்கின்றது. ஆனால் மேற்படி சம்பவம் நடைபெற்ற அன்று என்னோடு உரையாடியபோது, அவர் என்னை ஒரு மட்டக்களப்பு விரோதியாகவும், மட்டக்களப்பு அபிவிருத்திகளுக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிரானவன் என்ற உறுதியான நிலைப்பாட்டில் இருந்தே பேசினார். இவ்வாறு நம்பும்படியாக அவ்விளைஞர் மூளைச்சலவை செய்யப்பட்டு மட்டக்களப்பு பிரதேச வெறிகொண்ட நபராக ஆக்கப்பட்டமைக்கான பின்னணியை ஆராயும்போதுதான் எனக்கு வேதனையும் அதிர்ச்சியும் ஏற்படுகின்றது. அந்த இளைஞர் கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியத்தின் உறுப்பினராக இருந்தும் அவர் என்னோடு கொண்ட உரையாடலில் மட்டக்களப்புச் சங்கம் என்ற பெயரையே பயன்படுத்தினார். நான் மட்டக்களப்பு சங்கத்திற்கும் அதன் நடவடிக்கைகளுக்கும் எதிரானவன் என்ற கருத்து அவரின் உள்ளத்தில் இறுக்கமாக, பலமாக கட்டியமைக்கப்பட்டிருக்கின்றது. கிழக்குப் பிரதேச வாழ் மக்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்டதாக சொல்லும் கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியத்தின் உறுப்பினரான இவ்விளைஞர் ஒன்றியத்தையே மட்டக்களப்பு பிரதேச சங்கமாக குறுகிப் பார்க்க முயலும் மனநிலை கொண்டவராக ஏன் உருவாக்கப்பட்டார்? இதற்குக் காரணம் யார்? இளைஞர்களின் சக்தியை தன் சுயநல குறும்பிரதேச வெறிக்கு உட்படுத்தும் இந்தப் பின்னணியை, இந்த நபர்களைப் பற்றியே என் அக்கறையும், என் விமர்சனமும் உள்ளது.

குறுங்குழுவாதங்கள் பற்றி ஆய்வு செய்த சமூகவியல் ஆய்வாளர் பிரான்சிஸ் பேனன் இப்படிக் கூறுவார்:

**"சமூகத்தின் மேல்வர்க்கத்தட்டில் வாழும் மனிதர்களே தங்களின் சுயநலத்திற்காக, தங்களின் அரசியல் பிழைப்புக்காக, குறுங்குழுவாத, பிரதேச, தேசிய வெறியை அப்பாவி மக்களின் மனங்களில் ஊட்டி அவர்களை வழிநடாத்துகின்ற தலைமை சக்திகளாகவும் மாறுவர்"**

இறுதியாக, இப் பிரச்சினையின் சூத்திரதாரியாக, மட்டக்களப்பு பிரதேச வெறியை வளர்க்கும் நபராக செயற்பட்டவர்பற்றியும் நான் கதைக்கவேண்டியுள்ளது. கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியத்தின் ஸ்தாபகர் என்று தன்னைத்தானே பிரகடனப்படுத்தி இவ்வன்முறைத் தாக்குதலை நியாயப்படுத்தி துண்டுப்பிரசுரம் வெளியிட்டிருக்கும் ஞானம் என்கிற ஸ்ராலின் என்பவரே இந்த நபராவார். இந்த நபரே இந்த இளைஞர்களிற்கு என்னைப்பற்றிய மிகமோசமான கருத்துக்களின் மூலம் மூளைச்சலவை செய்தவராவார். என்னைப் பற்றிய மிகமோசமான கருத்துக்கள்மூலம் அந்த இளைஞர்களை என்மீது வன்முறைக்குத் தூண்டிவிட்ட ஸ்ராலின் என்கிற ஞானம் என்ற நபரே இன்றைய சமூகக் குற்றவாளியாகின்றார். என்னிடம் வந்து மன்னிப்புக் கோரிய அந்த இளைஞர் பிரான்சிற்கு வந்து மிகச் சமீபகாலமேயாகின்றது. ஞானம் என்கின்ற நபர் இந்த இளைஞரிடம் இருந்த மட்டக்களப்பு பிரதேசம் பற்றிய அக்கறையைப் பிரதேச வெறியாக்கி அவ்விளைஞரின் மனதை நச்சுப்படுத்தியுள்ளார். அதன்மூலம் தன் கற்பனையில் என்னைத் தன் அரசியல் இலக்கிய எதிரியாக்கி என்னைப் பழிவாங்க முனையும் ஞானத்தின் போக்கு மூலம் அவரின் அயோக்கியத்தனமான அரசியலையும் அதன் பின்னாலான சக்திகளையும் நாம் இனம்காண வேண்டியவர்களாக உள்ளோம்.

மேலும், இவ்வன்முறைச் சம்பவத்தைக் கண்டித்த சமூக அக்கறையாளர்கள் அனைவரையும் பிரதேச, யாழ்ப்பாண மேலாதிக்கம் கொண்டவர்களாகக் காட்ட முனையும் போக்கு எனக்கு வேதனையளிக்கின்றது. இவ்வன்முறையைக் கண்டிக்கும் அனைவரும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்விலும் விடுதலையிலும் அக்கறை கொண்டவர்கள். சமூக மேலாதிக்கங்கள் எத்திசையில் இருந்து வந்தாலும் அதற்கெதிராக கருத்தியல் சார்ந்தும் நடைமுறை சார்ந்தும் எதிர்கொண்டு போராடுபவர்கள். எனவே வன்முறைக்கு எதிரான குரல்களுக்கு பிரதேச சாயம் பூச வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அன்புடன்

அசோக் – யோகன் கண்ணமுத்து
assaie@hotmail.com

பாரிஸ், 29/06/2002

**குறிப்பு: கிழக்கிலங்கை கல்வி கலாச்சார ஒன்றியத்தின் பெயரால் சில பிரசுரங்கள் மின்னஞ்சல் மூலம் பலரது முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இவை உண்மைக்குப் புறம்பான செய்திகளை பரப்புவனவாகவும் மிகமோசமான பிரதேச வெறியை ஊட்டுவனவாகவும், என்மீது செலுத்தப்பட்ட வன்முறையை நியாயப்படுத்துபனவாகவும் இருக்கின்றன. இப்பிரசுரங்கள் ஒன்றியத்தின் உத்தியோகபூர்வ வெளியீடுகளாக இருக்குமாயின், ஒன்றியத்தின் ஆக்கபூர்வமான சிந்தனைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் நம்பகத்தன்மைக்கும் ஊறுவிளைவிப்பனவாகவும் முரண்கொண்டதாகவுமே அமையமுடியும்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்